# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.88 /2008

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : Gnanasekaran | Father/Husband Name: | Thangavel |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : Doctor |
| Religion | : | Age | : |
| Date | : 12.10.2020 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் தற்பொழுது மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிறுநீரக அறுவகை சிகிச்சை துறையில் உதவி போராசிரியராக பணிபுரிந்து வருகிறேன் நான் மேலூர் அரசு மருத்துவமனையில் 25.12.06ம் தேதி இரவு 11 மணியளவில் பணியிலிருந்தபோது 25 வயதான பாண்டியம்மாள் என்பவர் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவர் 25.12.06ம் தேதி மாலை 08 மணியளவில் கீரனூரில் அடையாளம் தெரிந்த நபர்களால் அருவாள் கம்பு கொண்டு தாக்கப்பட்டதால் தான் காயம்பட்டதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன. 1) இடதுபக்க நெற்றியில் சிதைந்த காயம் 1x1x1 செ.மீ. அளவில் இருந்தது, இடதுகை வலி இருப்பதாக கூறினார் அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதரண காயம் என்று சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.2 ஆகும். 25.12.06ம் தேதி இரவு 11.10 மணி அளவில் 14 வயதான வீரணன் என்பவர் சிகிச்சைக்கு வந்திருந்தார். அவரும் கீரனூரில் சுமார் 08 மணியளவில் அதே நாளில் கம்பு கடப்பாரையால் தாக்கப்பட்டதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன. 1) வலது கண்ணத்தில் 1x1 செ.மீ. அளவில் சிறாய்ப்பு காயம், 2) வலது தொடையில் 3x3 செ.மீ. அளவல் சிறாய்ப்பு காயம். 3) இடது நெற்றியில் 3x2 செ.மீ. அளவில் வீக்கக்க காயம் இருந்தது. நெஞ்சு வலிப்பதாக கூறினார். அவரும் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். அவர் தன்னிச்சையாக மருத்துவரின் அனுமதியின்றி சென்றுவிட்டதால் அவருக்கு

காயத்தின் தன்மை பற்றி கருத்து வழங்க இயலவில்லை. அவருடைய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆகும். அதே நாள் இரவு 11.15 மணியளவில் 60 வயதான வெத்தலை பாண்டி என்பவர் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரும் தன்னை கீரனூரில் இரவு 08 மணயிளவில் கம்பு கடப்பாரை ஆகிய ஆயுதங்களால் தாக்கியதாக சொன்னார். நான் அவரை பரிசோதித்தபோது அவரது 1)இடது கண்ணத்தில் 4x4 செ.மீ. அளவில் வீக்கக்காயம் இருந்தது. 2) இடது நெற்றியில் 4x3 செ.மீ. அளவில் ஒரு வீக்கக்காயம் இருந்தது. 3) இடதுபக்க மார்பில் 6x6 செ.மீ. வீக்கக்காயம் இருந்தது. 4) வலது முழங்கையில் 4x2 செ.மீ. அளவில் சிறாய்ப்பு காயம் இருந்தது. அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். அவரது காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.4 ஆகும். அதே தேதியில் இரவு 11 மணியளவில் 50 வயதான இருளி என்பவர் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரும் தன்னை கீரனூரில் சுமார் 08 மணியளவில் அதே நாளில் சுமார் 10 நபர்களால் கடப்பாரை மற்றும் கம்பு கொண்டு தாக்கப்பட்டதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது அவரது 1) வலது நெற்றியில் 2ஒ1ஒ1 செ.மீ. அளவில் ஒரு சிதைந்த காயம் இருந்தது. 2) வலது மேற்கையில் 8ஒ8 செமி, அளவில் ஒரு வீக்கக்காயம் இருந்தது. 3) அவரது வலது கையை தூக்க இயலவில்லை என்று கூறினார், 4) இடது மணிக்கட்டில் 4x4 செ.மீ. அளவில் ஒரு வீக்கக்காயம் இருந்தது. அவருக்கு மேலூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி அளித்து மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். மதுரை அரசு இராஜாஜ மருத்துவமனை எலும்பு முறிவு மருத்துவரின் சான்றின்படி அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.5 ஆகும். மேற்படி நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் அவர்கள் சொன்ன நேரத்தில் சொன்ன ஆயுதங்களால் தாக்கினால் ஏற்பட வாய்ப்புண்டு. போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் சொன்ன காயங்கள் இரவில் நடந்துபோகும்போது கீழே விழுந்து சிறிய கல் குதினால்கூட எற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். வீரணன் என்பவருக்கு சிறாய்ப்பு காயம்தான் ஏற்பட்டுள்ளது. அந்த காயமானது வண்டியில் செல்லும்போது கீழே விழுந்தாலும் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். 60 வயதான முதியவருக்கு ஏற்பட்ட காயமானது கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டு என்றாலும் அதனால் உடலில்

வலி உண்டாக வாய்ப்புண்டாலும் சரிதான். அருவாள் கடப்பாரை போன்ற ஆயுதங்கள் கூர்மையான ஆயுதங்கள் அவற்றினால் தாக்கினால் பெரிய காயங்கள் ஏற்படும் என்றால் கூர்மையான பகுதி கொண்டு தாக்கினால் பெரிய காயங்கள் ஏறுபடும், மழுங்கிய பகுதிய கொண்டு தாக்கினால் சிறிய காயங்கள் ஏற்படும். வண்டியில் செல்லும்போது கீழே தவறு விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரியல்ல. வேகமாக தாக்கினால் சிதைந்த காயம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இவ்வாறு சிறியள காயம் ஏற்பட வாய்ப்பிருக்காது என்றால் ஆயுதத்தின் வேகத்தை பொறுத்து காயத்தின் தன்மை மாறும். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.88 /2008

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : Arivasan | Father/Husband Name: | Rathinam |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : Doctor |
| Religion | : | Age | : |
| Date | : 12.10.2020 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் தற்பொழுது மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் எலும்பு முறிவு மற்றும் முடநீக்கியல் பிரிவில் துறை தலைவராக பணிபுரிந்து வருகிறேன். சி.சி.88-08 என்ற வழக்கில் காயம்பட்டு என்னிடம் சிகிச்சைக்கு வந்த நபருக்கு சிகிச்சை அளித்த விபரங்கள் அடங்கிய மருத்துவ சிகிச்சை கோப்புகள் பாதுகாக்குமிடத்தில் காணவில்லை. அதை தேடிப்பார்த்ததில் 21.07.08ம் தேதி Health and Family Welfare Department Reference No.58841/E1/2005 -ன்படி 2010 வரை உள்ள மெடிக்கோலீகல் கேசஸ் சம்மந்தப்பட்ட கோப்புகள் பாதுகாப்பு பெட்டகத்திலிருந்து அழிக்கப்படவேண்டும் என்று இருந்தது. எனவே அந்த உத்தரவின்படி இந்த வழக்கு கோப்பு அழிக்கப்பட்டிருக்கலாம். எனவே பாதுகாப்பு பெட்டகத்தில் இந்த வழக்கின் மருத்துவ சிகிச்சை கோப்பினை என்னால் கொண்டுவர இயலவில்லை. எனவே வழக்கு சம்மந்தமான விவரங்கள் எதையும் என்னால் நீதிமன்றத்தில் தெரிவிக்க இயலவில்லை. அந்த அரசாணை அ.சா.ஆ.6 ஆகும். (எதிரிதரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

குறுக்கு விசாரணை: இல்லை.